தமிழ்

தரம் 3

www.kedu.lk

ஆசிரியர் பி.நென்சி டொரதி
இ/எம்பி/ அஸ்ஸலாம் முஸ்லிம் மகா வித்தியாலயம்

❖ தேர்ச்சிகள் :

- சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.

❖ கற்றற்பேறுகள் :

சிறிய கட்டுரைகளைச் செவிமடுத்து அவற்றை மீளவும் முன்வைப்பார். உரிய வகையில் பிரயோகிப்பார்.

www.lkedu.lk

11

வண்ண மீன்கள்



அழகை அனைவரும் விரும்புகின்றோம். நாம் வாழும் வீடு அழகாக இருக்கவேண்டும். அழகுக்கு மேலும் அழகு தருவது தொட்டிகளில் வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்களே! சுறுசுறுப்பாக நீந்திச் செல்லும் மீன்கள் வற்றாத மகிழ்ச்சியை எமக்குத் தருகின்றன.



நம் முன்னோர் இயற்கையுடன் வாழ்ந்தார்கள். நிம்மதியாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். ஆனால் நாமோ இயற்கையைப் புறக்கணித்தோம். மனநிம்மதியை இழந்தோம். வீட்டினுள் நிம்மதியைத் தேடுவதானால் இயற்கையின் சில அம்சங்களையாவது வீட்டினுள் கொண்டு வரவேண்டும். மீன் தொட்டிகளில் அலங்கார மீன் வகைகளை வளர்த்தல் அவ்வாறான ஒரு செயற்பாடாகும்.



மீன் தொட்டியின் அழகை இரசியுங்கள். வண்ண வண்ண மீன்கள் சுறுசுறுப்பாக நீந்துவதைப் பாருங்கள். அவை ஒன்றையொன்று துரத்திச் செல்வது அழகோ அழகு! அதைப் பார்க்கும் போது எமது மனதிற்கு அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.



அலங்கார மீன்கள் சுறுசுறுப்பாக நீந்தி விளையாடுவதற்கு ஒட்சிசனே காரணம். அதற்கு நீர்த்தாவரங்களைத் தொட்டியில் இடலாம். அல்லது செயற்கையாகத் தொட்டி நீரினுள் ஒட்சிசனைச் செலுத்தலாம். தொட்டி நீரினுள் ஒட்சிசன் குறையுமானால் மீன்கள் சோர்வடைந்துவிடும். ஒட்சிசனுடன் அளவான உணவும் தேவை. அத்துடன் தொட்டியில் மீன் வளர்ப்பவர்கள் தொட்டியைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.



இவ்வாறு அலங்கார மீன்களை வளர்ப்பது தமது உடல் நலத்திற்கும் நல்லது எனக் கூறுவர். இவற்றைப் பார்த்து மகிழ்வதால் மன அழுத்தம் குறைகிறது. இரத்த அழுத்தம் உடையவர்களுக்கு அது குறைவதாகக் கண்டறிந்துள்ளனர். எனவே நாமும் அழகிய மீன்களைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன்பெறுவோம்







வண்ண மீன்கள் வளர்ப்போம்.

அன்பினைப் பரிமாறி மகிழ்ச்சி அடைவோம்.

www.ikoot.lk

பின்வரும் சொற்களை வாசித்து சொல்வதெழுதலாக எழுதுவோம்.

சுறுசுறுப்பு	அமைதி	இயற்கை
ஒட்சிசன்	முன்னோர்	நீர்த்தாவரங்கள்
மகிழ்ச்சி	செயற்கை	தொட்டிகள்
மன அழுத்தம்	நிம்மதி	உடல்நலம்

www.lkedu.lk

பயிற்சி - 1

கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூர்த்திசெய்க.

அழகாக, இயற்கையுடன், அழகை, அனைவரும், மகிழ்ச்சியுடன்

1. அழகை ..... விரும்புகின்றோம்.

2. நாம் வாழும் வீடு ..... இருக்க வேண்டும்.

3. நம் முன்னோர்கள் ..... வாழ்ந்தார்கள்.

4. நிம்மதியாக ..... வாழ்ந்தார்கள்.

5. மீன் தொட்டியின் ..... இரசியுங்கள்.

www.ikedu.lk

பயிற்சி - 2



தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுவோம்

1. நாம் வாழும் வீடு எப்படி இருக்கவேண்டும்?

_____

2. மன அழுத்தம் உள்ள வேளை எமக்கு ஆறுதல் தருவது எது?

_____

3. மீன்கள் சுறுசுறுப்பாக நீந்தி விளையாடுவதற்கு உதவுவது எது?


_____

4. அழகான மீன்களைப் பார்த்தால் எமக்கு என்ன தோன்றும்?

_____

5. நாம் அனைவரும் எதனை விரும்புகின்றோம்?

_____



www.lkedu.lk

பயிற்சி - 3

தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து தரப்பட்ட கூற்றுக்கள் சரியா, பிழையா என எழுதுவோம்

அழகை அனைவரும் விரும்புகின்றோம். நாம் வாழும் வீடு அழகாக இருக்கவேண்டும். அழகுக்கு மேலும் அழகு தருவது தொட்டிகளில் வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்களே! சுறுசுறுப்பாக நீந்திச் செல்லும் மீன்கள் வற்றாத மகிழ்ச்சியை எமக்குத் தருகின்றன.

1. யாவரும் அழகை விரும்புகிறோம். ( )

2. நாம் வாழும் வீடு அழகாக இருக்கவேண்டும். ( )

3. அலங்கார மீன்களை வளர்ப்பது உடல் நலத்திற்கு நல்லது. ( )

4. அழகுக்கு அழகு தருவது மீன் வளர்ப்பாகும். ( )

5. மீன் வளர்ப்பு எமக்குத் துன்பத்தைத் தரும். ( )

www.lkedu.lk

பயிற்சி - 4

கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதுவோம்

1. அழகுக்கு ..... தருவது மீன் வளர்ப்பாகும்.

2. மீன்களை வளர்ப்பது மன ..... தருகின்றது.

3. சிற்பியின் கைவண்ணத்தில் ..... உருவாகின்றது.

4. மீன்கள் என்றும் .....

5. மீன்களுக்கு ஒட்சிசனுடன் அளவான ..... தேவை.

உணவும், சுறுசுறுப்பானவை,

அழகு, சிற்பம், மகிழ்ச்சியைத்

www.lkedu.lk

நன்றி

தரம் 3

ஆசிரியர் பி.நென்சி டொரதி
இ/எம்பி/ அஸ்ஸலாம் முஸ்லிம் மகா வித்தியாலயம்

www.ikdu.lk